## தமிழ் மொழியில் A.I. எனப்படும்

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

### நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 4-

இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? தமிழ் மொழிக்கென்று எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? என்பது குறித்து ஒன்றிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சருக்கு, கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியா AI மிஷனின் தேசிய மொழி செயலாக்க திட்டத்தின் கீழ், பேச்சு அடையாளம் காணல், இயந்திர மொழிபெயர்ப்பு, உள்ளடக்க மேலாண்மை போன்ற நோக்கங்களுக்காக இந்திய மொழிகளில் செயற்கை நுண்ணறிவு தரவுத் தொகுப்புகளை ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளதா? அப்படி உருவாக்கியிருந்தால் அதற்கான நிதியுதவி வழங்கியுள்ளதா? அந்தத் தரவுத் தொகுப்புகளின் தற்போதைய நிலை என்ன? ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன? குறிப்பாக தமிழ் மொழிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பன போன்ற பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :

இந்தியா AI மிஷன் கீழ், தேசிய மொழி செயலாக்கம் (NATIONAL LANGUAGE PROCESSINGNLP), பேச்சு அடையாளம் காணல் (SPEECH RECOGNITION), இயந்திர மொழிபெயர்ப்பு (MACHINE TRANSLATION) மற்றும் உள்ளடக்க மேலாண்மை (CONTENT MODERATION) ஆகியவற்றுக்காக அரசு இந்திய மொழிகளுக்கான செயற்கை நுண்ணறிவு தரவுத்தொகுப்புகளை (AI DATA SETS) உருவாக்கியுள்ளதா அல்லது நிதியுதவி அளித்துள்ளதா? அவ்வாறு இருந்தால், அத்தகைய தரவுத்தொகுப்புகளின் தற்போதைய நிலை, பயன்பாட்டிற்கு வந்துள்ளதின் விவரம்? மொழிவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்கள் என்ன?

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டுக்கும் இத்தகைய தரவுத் தொகுப்புகளை உருவாக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் செலவிடப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் அதை செயல்படுத்தும் நிறுவனங்க களின் விவரங்கள் என்ன? ஆகியவற்றின் மொழிவாரியான

தமிழ் மொழியில் பேச்சு வகைகள் (SPOKEN VARIANTS) உட்பட உயர்தர பிரத்யேக தரவுத்தொகுப்புகளை (DEDICATED HIGHQUALITY DATASETS) உருவாக்கி, தமிழ் மொழியில் செயற்கை நுண்ணறிவின் துல்லியம், பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா; அவ்வாறு இருந்தால், அதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகள், கால அட்டவணை மற்றும் வழங்கப்பட்ட நிதி ஆகிய விவரங்கள் என்ன?

மொழியியல் நிபுணர்கள், இத்தகைய தரவுத்தொகுப்புகளின் உருவாக்கத்திற்கு வழிகாட்டுவதற்காக தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் ஏதேனும் பல்கலைக்கழகங்கள் ஆலோசனைக் அல்லது கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளனவா? அவ்வாறு நடத்தப்பட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

தமிழ் மொழி தரவுத்தொகுப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட, ஒப்புதல் அளிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதியின் மொத்தத் தொகை விவரங்கள் என்ன?

இவ்வாறு தயாநிதிமாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

---

## ஒலிம்பிக்கில் இந்திய விளையாட்டு வீரர்கள் மிகச்சிறப்பாக செயல்பட

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் புதிய திட்டங்கள் உள்ளதா?

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 5 -

தென்சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் விளையாட்டுத் துறை சம்பந்தமான சில கேள்விகளை கேட்டார்.

அதன் விபரம், 2028ம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் நடைபெறும் அடுத்த 2 ஒலிம்பிக் அட்டவணையில் இந்திய விளையாட்டு வீரர்கள் மிகச்சிறப்பாக செயல்பட ஒன்றிய அரசிடம் ஏதேனும் புதிய திட்டங்கள் மற்றும் பயிற்சி அட்டவணைகள் உள்ளதா?

2036ம் ஆண்டு கோடை கால ஒலிம்பிக்கை நடத்த இந்தியா ஆர்வமாக உள்ளதா?

இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? போன்ற கேள்விகளை கேட்டு இருந்தார். இதற்கு ஒன்றிய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மண்டாவியா எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார்.



அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:

2028 அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மற்றும் 2032 ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் உள்ளிட்ட அனைத்து வரவிருக்கும் சர்வதேச போட்டிகளுக்கும் உயரடுக்கு விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்காக, இந்திய அரசு தேசிய விளையாட்டு கூட்டமைப்பு களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பின்வரும் 2 முக்கியமான திட்டங்களை செயல்படுத்துகிறது.

தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு உதவி செய்வது. அதாவது உயரடுக்கு விளையாட்டு வீரர்களின் பயிற்சி, வெளிப்பாடு போட்டிகள், வெளிநாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்களை ஈடுபடுத்துதல், உபகரணங்கள் மற்றும் பிற உயர் செயல்திறன் தொடர்பான செயல்பாடுகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கப்படுவது போன்றவை.

இலக்கு ஒலிம்பிக் மேடைத் திட்டதத்தின் கீழ், ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்கிற்கான நிரூபிக்கப்பட்ட பதக்க திறன் கொண்ட அடையாளம் காணப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவு வழங்கப்படுகிறது.

இதில் வெளிநாடு மற்றும் இந்திய பயிற்சி, சர்வதேச போட்டிகள், விளையாட்டு அறிவியல் ஆதரவு, உபகரணங்கள், பணம் மற்றும் ஆதரவு ஆகியவை அடங்கும்.

இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான ஏலம் விடுதல் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் பொறுப்பாகும். மேலும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான உரிமைகளை சர்வதேச ஒலிம்பிக் குழு விரிவான ஹோஸ்ட் தேர்வு செயல்முறை மூலம் செய்கிறது.

ஹோஸ்ட் தேர்வு செயல்முறை பொது களத்தில் ஐ.ஓ.சி வலை தளத்தில் கிடைக்கிறது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## திருவண்ணாமலை மாவட்டம்

# மேல் செங்கத்தில் மூலிகை பூங்கா அமைத்திட நடவடிக்கை எடுப்பீர்!

### மக்களவையில் சி.என். அண்ணாதுரை கோரிக்கை!

புதுடெல்லி, டிச. 5 -

திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கம் வனப்பகுதியில் காலியாக உள்ள இடத்தில் மூலிகை மற்றும் சூழல் பூங்கா அமைத்திட ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்

மக்களவையில் தனிநபர் தீர்மானத்தின் கீழ் அவர் இது தொடர்பாக வலியுறுத்தி பேசியதாவது :-

திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கம் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான ஏறத்தாழ 10000 ஏக்கர் இடம் காலியாக உள்ளது அந்த இடத்தில் கடந்த 10 ஆண்டுகளாக எந்தவித வேளாண் நடவடிக்கைகளோ அல்லது தோட்டக்கலை நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை அந்த இடத்தில் மூலிகை பூங்கா மற்றும் சூழல் பூங்கா அமைக்க ஒன்றிய அரசு உடனடியாக முன்வர வேண்டும்

அவ்வாறு அந்த இடத்தில் மூலிகை பூங்கா அமைக்கப்படுமேயானால் அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகள் கிடைக்கும் அந்த இடத்தில் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்பது வெகு நாட்களாக அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையாகும் இது தொடர்பாக பல முறை இந்த அவையிலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மிகப் பெரிய அளவில் இத்தகைய பூங்கா அமைக்கப்படுமேயானால் பல்வேறு தாவர இனங்களும் உயிர் வாழ் இனங்களும் பலனடைய வாய்ப்பு உண்டு. அந்த இடத்தில் ஏற்கனவே வலியுறுத்தபடி இந்த மூலிகை பூங்கா அமைக்கப்படுமேயானால்



மேலும் பல்வேறு வசதிகளுக்கு வாய்ப்பு இருக்கும். குறிப்பாக வேளாண் தொடர்பான நடவடிக்கைகள் பழங்குடியினரின் நலத் திட்டங்கள் சுற்றுச்சூழல் அமைப்புகள் அங்கே உருவாக வாய்ப்பு உண்டு அது மட்டுமின்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான ஒன்றிய அரசின் பல்வேறு நடவடிக்கைகளும் திட்டங்களும் உருவாக வாய்ப்பு உண்டு அதன் காரணமாக அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் அவர்களின் பொருளாதார நிலையும் உயரும்

அத்துடன் மூலிகை தாவரங்கள் பயிரிடவும் அது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளவும் மலைவாழ் மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதோடு அவர்களின் பொருளாதார வாய்ப்பு மென்மேலும் அதிகரிக்கும்.

எனவே திருவண்ணாமலை மாவட்டம் மேல் செங்கத்தில் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருக்கும் வனத்துறைக்கு சொந்தமான சுமார் 10,000 ஏக்கரில் மூலிகை தோட்டம் மற்றும் சூழல் இயல் தோட்டம் அமைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து மலைவாழ் மக்கள் வாழ்வில் மேம்பாட்டிற்கு உதவிடுமாறு இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன் ஒன்றிய அரசும் விரைந்து செயல்பட்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கோரிக்கை விடுத்தார்.

---

## சிறுபான்மையினர் மாணவர்களின்

# கல்வி உதவித் தொகையை நீட்டிக்க ஒப்புதல் தராதது ஏன்?

### நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, டிச. 5 -

சிறுபான்மையினர் மாணவர்களின் கல்வி உதவித்தொகையை நீட்டிக்க ஒப்புதல் இல்லை. நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசின் அராஜகப் பதிலுக்கு கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் மாண வர்களுக்கான கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் நிலவும் தாமதம் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய சிறு பான்மையினர் நலத்துறையிடம் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில், சிறுபான்மையினர் மாணவர்களுக்கான முக்கிய கல்வி உதவித்தொகை திட்டங்களை 2021-22 நிதி ஆண்டுக்குப் பிறகு நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்படவில்லை என அராஜகமாக தெரிவித்துள்ளது. மேலும், இந்த உதவித்தொகைகளை வேறு திட்டங்களுடன் இணைத்து செயல்படுத்துவது குறித்தும் மௌனம் சாதித்துள்ளது.

கே.இ.பிரகாஷ் எம்.பி. எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

1. 2022-23 நிதி ஆண்டு முதல் சிறுபான்மையினர் மாணவர்களுக்கான, மெட்ரிக் கல்விக்கு முந்தைய (PRE MATRIC), மெட்ரிக் கல்விக்குப் பிந்தைய (POSTMATRIC), மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான (MERIT CUMMEANS) உதவித்தொகைக்கு ஒப்புதல் அளிப்பது மற்றும் வழங்குவதில் நீண்ட கால தாமதங்கள் இருப்பது உண்மையா, ஆம் எனில் அதற்கான காரணங்கள் என்ன?

2. கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்த உதவித்தொகைகளை உரிய நேரத்தில் செயல்படுத்துதல், ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலை உறுதிசெய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

3. எதிர்காலத்தில் இத்தகைய தாமதங்களைத் தடுக்க அரசாங்கம் ஏதேனும் சீர்திருத்தங்கள் அல்லது நடைமுறை மாற்றங்களை முன்மொழிகிறதா, ஆம் எனில் அதன் விவரங்கள் என்ன?

இதற்கு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அளித்த பதில் வருமாறு: “சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் 6 அறிவிக்கப்பட்ட மதச் சிறுபான்மை சமூகங்களுக்காக மெட்ரிக் கல்விக்கு முந்தைய, மெட்ரிக் கல்விக்குப் பிந்தைய மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான உதவித்தொகை திட்டங்களைச் செயல்படுத்தியது. இருப்பினும், இந்தத் திட்டங்கள் 2021-22பிறகு செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை.”



1. இது சிறுபான்மையினர் முன்னேற்றத்தின் மீதான திட்டமிட்ட தாக்குதல் இந்த அரசு ஏற்கனவே சிறு பான்மையினர் வெளிநாடுகளில் கல்வி கற்க உதவும். ‘பதோ பர்தேஷ் (PADHO PARDESH)’ திட்டத்தை ரத்து செய்தது. அவர்களின் முனைவர் ஆய்வுக்கு உதவும் மவுலானா ஆசாத் உதவித்தொகையை தொடர்ந்து தாமதிப்பது ஆகியவற்றை செய்து வருகிறது. இதன் வரிசையில், தற்போது சிறு பான் மையினர் மாணவர்களுக்கான மூன்று முக்கிய கல்வி உதவித்தொகைகளை நீட்டி க்கவும் மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளின் மூலம் ஒன்றிய அரசு எட்ட முனைவது ஒரே இலக்கு தான். சிறுபான்மையினரை பொருளாதார ரீதியாக பலவீனமாக்கி, முடக்க வேண்டும் என்பதே ஆகும். இது கடுமையாக கண்டிக்கத்தக்கது மட்டுமல்ல, ஜனநாயக வழியில் தடுத்து நிறுத்தப்பட வேண்டியது.

2. கேள்விக்குறியாகும் சிறுபான்மையினர் மாணவர்களின் கல்வி: இந்த 3 உதவித்தொகைகளையும் நிறுத்தியிருப்பதன் மூலம், சிறுபான்மையினர் மாணவர்களின் ஆரம்பக் கல்வி, உயர்கல்வி ஆகிய இரண்டுக்கும் ஒருசேர அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ளது ஒன்றிய அரசு.

3. அடிப்படை சமூகநீதியை மறுக்கும் ஒன்றிய அரசு: இந்த உதவித் தொகை நிறுத்தம் பற்றி கவலை தெரிவித்திருக்கும் நாடாளுமன்ற நிலைக்குழு, ஆதி திராவிடர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைகளை தொடரும் அரசு, ஏன் சிறு பான்மையினர் உதவித்தொகையை மட்டும் நிறுத்துகிறது என்று சரியான கேள்வி கேட்டுள்ளது.

ஆம், சமூகநீதி நடவடிக்கைகளில் ஒரு தரப்பினரை மட்டும் தனித்து நிறுத்தி அவர்களுக்கான திட்டங்களை மறுப்பது, இந்த நாடு கடைபிடிக்கும் அடிப்படை சமூகநீதிக் கொள்கைக்கு எதிரானது. ஆனால், இதை உணராமல் அல்லது மதிப்பு அளிக்கமால் ஒன்றிய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பின்பற்றுக: சமூகநீதியை நிலைநாட்டும் வகையில், தமிழ்நாடு அரசு தனது தனது நிதியில் நிதியில் சிறு பான்மையினர் கல்வி உரிமையைப் பேணிக்காத்து, ஒரு வழிகாட்டியாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, ஒன்றிய அரசு நிறுத்திய 1 முதல் 8 ஆம் வகுப்பு மாணவியருக்கான உதவித்தொகையை, தமிழ்நாடு அரசு தனது நிதி உதவியுடன் தொடர்ந்து வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

குறைந்த வட்டியில் மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) மூலம் குறைந்த வட்டியில் கல்விக் கடன் வழங்குதல், புதுமைப் பெண் திட்டம், காலைச் சிற்றுண்டி சிற்றுண்டி திட்டம் போன்ற மாநில அரசின் நலத் திட்டங்களைச் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. தமிழ்நாட்டைப் பின்பற்றி அல்லது தமிழ்நாட்டிடம் இருந்து சமூகநீதிப் பாடம் கற்றுக்கொண்டு, ஒன்றிய அரசு சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியை பேணிக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தினார்.

---

## தமிழ்நாட்டில்

# சோலார் பூங்கா அமைக்க ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

### நாடாளுமன்றத்தில் தருமபுரி ஆ.மணி எம்.பி.கேள்வி!

புதுடெல்லி, டிச. 5 -

நாடாளுமன்றத்தில் தருமபுரி ஆ.மணி எழுப்பிய கேள்வி வருமாறு :-

தமிழ்நாட்டில் சூரிய மின்சக்தி உற்பத்திக்கு அதிக வாய்ப்புள்ள தருமபுரி மாவட்டத்திற்கு புதிய சூரிய மின்சக்தி பூங்காக்களை தொடங்க அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றிய அரசிடம் உள்



ளதா? இருப்பின் சூரிய சக்தி திட்டத்தின் கீழ் சூரிய மின்சக்தி பூங்கா திட்டம் தொடங்க தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட மத்திய நிதி உதவி குறித்த விபரங்கள் என்ன ?

தமிழ்நாட்டில் தருமபுரி உள்ளிட்ட சூரிய மின் சக்தி உற்பத்தி செய்ய அதிக வாய்ப்புள்ள மாவட்டங்களில் தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்து,சூரிய சக்தி பூங்காக்கள்,பெரிய அளவிலான சூரிய சக்தி திட்டங்களை அமைக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்று புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீ பாத் யோசோ நாயக்கிடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.




விராலிமலை ப்ராவிடென்ஸ் கான்வென்ட் மெட்ரிக் பள்ளியில் திராவிட மாடல் அரசின் சிறப்புமிகு திட்டங்களில் ஒன்றான ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்ட சிறப்பு மருத்துவ முகாமை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில், விராலிமலை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி முன்னிலையில் தொடங்கி வைத்து , கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், அ.இளங்குமரன், கே.பி. அய்யப்பன் மற்றும் சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சுகாதார அலுவலர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர்.

---

## ஒன்றிய அரசு விளக்க வேண்டும்!

# ஒரே நாடு - ஒரே தேர்தல் - ரேஷன் கார்டு - தற்போதைய நிலை என்ன?

### மக்களவையில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 5 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்

அக்கேள்வியில், ஒரு நாடு ஒரு ரேஷன் கார்டு (ONORC) திட்டத்தின் தற்போதைய நிலை, இது முழுமையாக செயல்படுத்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் ONORC அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட மாநிலங்கள் முழுவதும் பொது விநியோக முறை (PDS) நன்மைகளை அணுகக்கூடிய மொத்த ரேஷன் கார்டு பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் நாடு வாரியாக ONORCஐ செயல்படுத்துவதில் ஏதேனும் தொழில்நுட்ப, நிர்வாக அல்லது தளவாட சவால்களை ஒன்றிய



அரசு அடையாளம் கண்டுள்ளதா என்றும் தமிழ்நாடு உட்பட புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கு ரேஷன் சலுகைகளை தடையின்றி எடுத்துச் செல்வதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த 65 நடவடிக்கைகள் என்ன? என்றும் தகுதியுள்ள எந்தவொரு பயனாளியும் விலக்கப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காக, ONORC திட்டத்தை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் வலுப்படுத்தவும் ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்றும் தே.மலையரசன் கேள்வி எழுப்பினர்.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பைஞ்ஞீலி ஊராட்சி அரசு மேல்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், தலைமை ஆசிரியர் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.